**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், திருப்புவனம்**

| 2026–ம் ஆண்டு ஜூலை மாதம் 28–ம் நாள் செவ்வாய்க்கிழமை பிரதிவாதி தரப்பு சாட்சியின் வாக்குமூலம் 1869ம் ஆண்டு சட்ட எண்.44வது பிரிவு 6(1) ன் பிரிவின்படி உதவியாளர் திருமதி. பாண்டிச்செல்வி என்பவரால் உறுதி பிரமானம் செய்யப்படுகிறது. | | | |
|---|---|---|---|
| பெயர்: | **காளிதாஸ்** | தொழில்: | |
| த.பெ: | கருப்பையாபிள்ளை | சமயம்: | |
| கிராமம்: | | சாதி: | |
| வட்டம்: | | வயது: | |

**28.07.2026 OS.41/2020 பி.வா.சா.1 காளிதாஸ்**

**வாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை தொடர்ச்சி**

1) இவ்வழக்கை தாக்கல் செய்த 1ம் வாதி தனது பிராதில் ஏற்கனவே நடந்த அ.வ.எண்.8/2008, அதன் பேரில் மேல் முறையீடு செய்யப்பட்ட AS.No.50/2013 வழக்கின் தீர்ப்புகள் தன்னைக் கட்டுப்படுத்தாது என்றும் 1ம் வாதி கிரையம் வாங்கிய 23.09.2004ம் தேதியிட்ட ஆவண எண். 2118/2004யைப் பொறுத்து செல்லத்தக்கது என விளம்புகை செய்யகோரியும் கேட்டு இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளார் என்றால் சரிதான். மேற்படி செல்லத்தக்கது என கேட்டுள்ள ஆவண எண்.2118/2004 பத்திரத்தில் கண்ட சொத்தானது 8 செண்ட் விஸ்தீரனம் கொண்டது என்றால் சரிதான். நான் தாக்கல் செய்துள்ள பி.வா.சா.ஆ.8, 9 ஆவணங்கள் அ.வ.எண். 8/2008ல் ஏற்பட்ட தீர்ப்பு, தீர்ப்பாணை மற்றும் மேல் முறையீட்டு எண்.50/2013ல் ஏற்பட்ட தீர்ப்பு மற்றும் தீர்ப்பாணை என்றால் சரிதான்.

2) மேற்படி பி.வா.சா.ஆ.8, 9 தீர்ப்புகள் மற்றும் தீர்ப்பாணைகளில் பிராதில் சொல்லியுள்ள ஆவண எண்.2118/2004 ஆவணத்தில் கண்ட 8 செண்ட்டை பொறுத்து எவ்வித குறிப்புகளும் ஏற்படவில்லை என்றால் சரிதான். மேற்படி ஆவண எண். 2118/2004யை பொறுத்து செல்லாது என நான் எவ்வித பரிகாரமும் கோரி வழக்கு தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். தாவா வழக்கிலும் நான் மேற்படி ஆவணம் செல்லாது என எதிரிடை கோரூரிமை எதுவும் கோரவில்லை என்றால் சரிதான். எனவே நாளது தேதி வரையில் 1ம் வாதி 1ம் பிரதிவாதியிடம் வாங்கிய கிரையம் செல்லும் என்று தான் உள்ளது என்றால் சரிதான். எனவே வாதிகள் கோரியுள்ள பரிகாரத்தின் படி மேற்படி கிரையப் பத்திரம் செல்லத்தக்கது என்றால் சரிதான்.

R VENKADESH PRASANTH

Digitally signed by R VENKADESH PRASANTH
Date: 2026.07.28 13:28:39 +0530

3) மேற்படி முன் வழக்கு அ.வ.எண்.8/2008 வழக்கானது 1ம் வாதி 1ம் பிரதிவாதியிடம் கிரையம் வாங்கிய 5 செண்ட் சொத்தை பொறுத்து நடைபெற்றது என்றால் சரியல்ல. மேற்படி 5 செண்ட் சொத்தானது வேறு புல எண்ணில் வருகிறது என்றால் சரியல்ல. மானாமதுரை சார்பு நீதிமன்றத்தில் மேற்படி மேல் முறையீடு மாறுதலாகி AS No.238/2019 என கோப்பிற்கு எடுக்கப்பட்டு மேற்படி மேல் முறையீட்டு வழக்கில் ஏற்பட்ட தீர்ப்பானது தரப்பினர்களுக்கு சமரசம் ஏற்பட்டு அதன் அடிப்படையில் ஏற்பட்ட தீர்ப்பாகும் என்றால் சரிதான். மேற்படி அ.வ.எண்.8/2008 வழக்கில் இந்த நம்பர் 1ம் வாதி பிரதிவாதி தரப்பு 2ம் சாட்சியாக விசாரிக்கப்பட்டுள்ளார் என்றால் சரிதான். மேற்படி ஆவணம் தான் நான் தாக்கல் செய்துள்ள பி.வா.சா.ஆ.1 என்றால் சரிதான்.

4) மேற்படி சாட்சியத்தில் இந்த நம்பர் 1ம் வாதி 23.09.2004ம் தேதி பதிவு செய்யப்பட்ட கிரைய ஆவணத்தின் மூலம் கீழ்புறம் 8 செண்ட்டை கிரையம் வாங்கி அனுபவம் செய்து வருவதாக சாட்சியம் அளித்துள்ளார் என்றால் சரியல்ல. மேலும் இந்த நம்பர் 1ம் வாதி மேற்படி வழக்கில் பி.வா.சா.2 ஆக விசாரிக்கப்பட்டு தனது குறுக்கு விசாரணையில் மொத்த விஸ்தீரனம் 31 செண்ட்டில் மேல்புறம் 5 செண்ட்டை காந்திமதியிடம் கிரையம் வாங்கியதாக சாட்சியம் அளித்துள்ளார் என்றால் சரியல்ல. மேற்படி மேல்புறம் கிரையம் வாங்கிய 5 செண்ட் நிலத்தைப் பொறுத்து ஏற்படுத்தப்பட்ட பத்திரத்தை கிரையம் கொடுத்த காந்திமதிஅம்மாளின் கணவரிடம் ஒப்படைத்துவிட்டதாக சாட்சியம் அளித்துள்ளார் என்றால் சரியல்ல. அ.வ.எண்.8/2008 வழக்கில் இந்த நம்பர் 1ம் வாதி கிரையம் வாங்கிய மேல்புறம் 5 செண்ட் சொத்தை பொறுத்து கிரைய பத்திரத்தை காந்திமதி அம்மாளின் கணவரிடம் ஒப்படைத்துவிட்டதால் இந்த நம்பர் 1ம் வாதியை மேற்படி வழக்கில் சேர்க்க தேவையில்லை என முடிவு செய்யப்பட்டது என்றால் சரியல்ல.

5) தற்போது 31 செண்ட்டும் 3, 4 பிரதிவாதிகளால் நில ஆர்ஜிதம் செய்யப்பட்டுவிட்டது என்றால் சரிதான். 31 செண்ட் நில ஆர்ஜிதம் செய்யப்பட்டதற்கு நான் ஏதேனும் நஷ்டஈடு பெற்றேனா என்றால் பெறவில்லை. முந்தைய வழக்கான அ.வ.எண்.8/2008 வழக்கில் இந்த நம்பர் 1ம் வாதியான மணி என்பவரை தரப்பினராக சேர்க்கவில்லை என்றால் சரிதான். இவ்வழக்கு நிலுவையில் இருந்து வருகையில் 1ம் வாதி காலமாகிவிட்டதால் அவருடைய வாரிசுகளை 2 முதல் 9 வாதிகளாக இவ்வழக்கில் சேர்க்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். முந்தைய வழக்கில்

R
VENKADESH
PRASANTH
Digitally signed by R VENKADESH PRASANTH
Date: 2026.07.28 13:28:48 +0530

தரப்பினர்களுக்குள் கூட்டாக இருந்து கொண்டு வழக்கை சரிவர நடத்தவில்லை என்றால் சரியல்ல. 1ம் வாதியை மோசம் செய்ய வேண்டும் என்ற கெட்ட எண்ணத்தில் தான் மேற்படி அ.வ.எண்.8/2008 வழக்கு தாக்கல் செய்யப்பட்டு கூட்டாக இருந்து கொண்டு கிரையம் வாங்கிய நபரான இந்த நம்பர் 1ம் வாதியை தரப்பினராக சேர்க்காமல் வழக்கு நடத்தி தீர்ப்பு பெற்றுள்ளோம் என்றால் சரியல்ல.

6) அதே போல் மேல்முறையீட்டு வழக்கு எண். 238/2019 வழக்கில் தரப்பினர்களுக்குள் சமரசம் எட்டப்பட்டதாக சொல்லி மெமோ தாக்கல் செய்து வழக்கு வாபஸ் பெறப்பட்டது என்றால் சரியல்ல. மேற்படி சமரசம் எட்டப்பட்டதை எவ்வகையில் சமரசம் எட்டப்பட்டது என குறிப்பிட்டு சொல்லி தீர்ப்பாணையாக பெறவில்லை என்றால் சரிதான். எனவே மேற்படி அ.வ.எண்.8/2008 மற்றும் அதன் பேரில் ஏற்பட்ட மேல் முறையீட்டு எண். 238/2019 வழக்குகளில் ஏற்பட்ட தீர்ப்பு மற்றும் தீர்ப்பாணைகள் இந்த வாதிகளை கட்டுப்படுத்தாது என்றால் சரியல்ல. எனவே தாவா வழக்கில் 1ம் வாதியால் தாக்கல் செய்யப்பட்ட பிராதில் கோரியுள்ள பரிகாரங்கள் வாதிகளுக்கு கிடைக்கதக்கது என்றால் சரியல்ல.

**(3, 4 பிரதிவாதிகள் தரப்பு வழக்கறிஞரின் வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது).**

Taken down by me in open court readover/interpreted to the witness in Tamil and acknowledged by him/her to be correct

R VENKADESH PRASANTH

Digitally signed by R VENKADESH PRASANTH
Date: 2026.07.28 13:28:55 +0530

District Munsif Cum Judicial Magistrate,
Thiruppuvanam